மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஊராட்சி மன்றத்திலிருந்து பேரூராட்சிமன்றம், நகராட்சிமன்றம் என்று இப்படியெல்லாம் வந்து, மூலக் கேள்விக்குத் தொடர்பு இல்லாமல் துணைக் கேள்விகள் வந்து கொண்டிருக்கின்றன. மூலக் கேள்விக்குத் தொடர்புள்ள கேள்விகளே கேட்கப்பட வேண்டும்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : கிராம ஊராட்சி மன்றங்களிலே பணிபுரியும் எழுத்தர்களுக்கு அந்தக் கிராம ஊராட்சியின் மக்கள் தொகை அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுகிறது என்று அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், அவைகளை மாற்றி அமைத்து, அவர்களை முழு நேர ஊழியர்களாக ஆக்குவதற்கு இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கெனவே அது பற்றிய விளக்கத்தை இங்கே சொல்லியிருக்கிறேன். மு.ப. 9–39

திரு. என். எஸ். வி. சித்தன் : ஊராட்சி ஒன்றிய ஊழியர்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அத்தகைய திட்டம் எதுவும் தற்போது இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு எப்படி கொடுக்கப்படுகிறதோ அதே விகிதத்தில் மாநில சர்க்கார் ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காகப் போராடிய நாம், அதில் கவனம் செலுத்தி வருகிற நாம், மாநில சர்க்கார் ஊழியர்களுக்கு எப்படிக் கொடுக்கப்படுகிறதோ அதே போல் பஞ்சாயத்து ஊழியர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்க இன்றைக்கு இல்லாவிட்டாலும் அடுத்தாற்போல் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஊழியர்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுக்க இந்த அரசு மனப்பூர்வமாக ஆர்வம் கொண்டிருக்கிறது. இருந்தாலும் ஊராட்சி நிதிநிலையை மனத்தில் கொண்டு காரியங்களைச் செய்யவேண்டுமென்ற நிலையில், தற்போது வருகிற வருமானத்தில் சிலபல ஊராட்சிகளில் 85 சதவிகிதத்திற்கு மேற்பட்ட தொகை ஊதியமாகவே கொடுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது. ஆகவே, வரி செலுத்துவோர் குறைகளையும் கவனித்துத் தீர வேண்டிய நெருக்கடி நிலை இருக்கிறது.

திரு. நா. காசிராமன் : ஸ்தல ஸ்தாபனங்களில் பணிபுரியும் சிற்றெழுத்தர்கள், அப்பர் டிவிஷன் க்ளார்க்ஸ், ஆகியோருடைய சம்பள விகிதங்கள் இன்க்ரிமென்ட் ஆகியவை அரசாங்கத்தில் பணி புரிகின்றவர்களுக்கு இருப்பதைப் போல் அல்லாமல் வித்தியாசமாக இருக்கிறது. இதையெல்லாம் சரி செய்து அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுப்பது போல் சம்பள விகிதத்தைக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கெனவே சொன்னபடி சம்பளக் குழுவின் பரிந்துரை அடிப்படையில் இன்னின்ன விகிதங்களில் கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் கொடுக்க நிதிநிலை சீரான நிலையைப் பெற்றால்தான் முடியும். அந்தக் குறைகளை எல்லாம் போக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும்.

மேட்டுப்பாளையம் பகுதியில் தொழிலாளர் மருத்துவ மனை.

*வினா 164. **திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் பகுதியில் ஈ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் 50 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனை ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

(இ) அதன் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. க. துரைசாமி : அமைச்சர் அவர்கள், மேட்டுப்பாளையத்தில் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் ஆஸ்பத்திரி கட்டுவதற்கில்லை என்று சொன்னார்கள். பொது மருத்துவமனையிலாகிலும் இ.எஸ்.ஐ. வார்டில் பத்து படுக்கைகளை அதிகமாக்க அரசாங்கம் விரைவில் முயற்சி எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பொது மருத்துவ மனையில் இ.எஸ்.ஐ. திட்டத்தின் கீழ் 16 படுக்கைகள் கொண்ட ஒரு வார்டைக் கட்ட வேண்டுமென்று அரசாங்கம் உத்தேசித்து அதற்கு ஒப்பம் அளித்தது. ஆனால் மத்திய சர்க்கார் ஒத்துக் கொள்ளவில்லை. அதற்காகக் கடிதப் போக்குவரத்து நடந்து கொண்டிருக்கிறது.

திரு. சு. துரைசாமி : அமைச்சர் அவர்கள் 16 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி கட்டுவதற்குத் திட்டமிருப்பதாகச் சொன்னார்கள். விரைவில் அதைக் கட்டி முடிப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : மருத்துவ மனை கட்டுவதாகச் சொல்லவில்லை. ஒரு வார்டு கட்டுவது பற்றி திட்டம் இருக்கிறது என்று தான் சொன்னேன். இ.எஸ்.ஐ. கார்ப்பொரேஷனிடமிருந்து ஒப்புதல் கிடைத்த பிறகு நிறைவேற்றப்படும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்துக்குத் தேவையான இரும்புக் கம்பங்கள்.

*165 வினா—**திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குத் தேவையான இரும்புக் கம்பங்கள் எந்தெந்த நிறுவனங்களிடத்தில் எந்த அடிப்படையில் வாங்கப்படுகிறது ?

(இ) 1965–66, 1966–67, 1967–68 ஆகிய ஆண்டுகளில் முறையே எந்தெந்த நிறுவனங்களில் எவ்வளவு ரூபாய் மதிப்புள்ள இரும்புக் கம்பங்கள் வாங்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு திரு ஓ. பி. ராமன் : (அ & இ)—தமிழ்நாடு மின்சார வாரியம் தற்போது கிராம மின் வசதிப் பணிகளுக்காக உருக்குக் குழாய்க் கம்பங்கள், இரயில் கம்பங்களைத் தருவிக்க ஏற்பாடுகள் செய்வதில்லை. 33 கிலோ வாட், 66 கிலோ வாட் உயர் அழுத்த மின் விசைக் கம்பிகளுக்கு உறுதியான உருக்கு உத்திரங் கள் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் புள்ளிகளை அனுப்புமாறு கேட்டு அறிவிப்பு வெளியிட்ட பிறகு அவற்றைத் தருவிக்க 1966–67-ல் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அச்சாதனங்களைத் தருவிக்கச் செய்யப்பட்ட ஏற்பாடுகள் குறித்த விவரங்களைக் காட்டும் விவர அறிக்கை* மன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கொளத்தூர் கோதண்டம் : 1966–67-க்கு மட்டும் வாங்கப்பட்டிருப்பதாகவும், அதற்குப் பிறகு சாமான்கள் தேவையில்லாததால் வாங்கவில்லை என்றும் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்குப் பிறகு என்ன பயன்படுத்தப்படுகிறது என்பதை மேஜை மேல் வைக்கப்பட்டிருக்கும் குறிப்பில் பார்க்கும்போது 1966–67-ல் மூன்று குறிப்பிட்ட கம்பெனிகளில் குறிப்பிட்ட விலைக்கே வாங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதெல்லாம் டெண்டர் மூலம் வாங்கப்பட்டதா அல்லது வேறு கொட்டேஷன் மூலம் வாங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

---

* 81,ம் பக்கத்தில் இரண்டாவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.